**செம்பாக்கம் நகராட்சியில் 30.9.2020ம் நாள் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணகூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர் 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.689 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நகராட்சி பகுதியில் உள்ள 16585 வீடுகள் 927 கடைகள் மற்றும் காலி மனைகள், புதியதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளும் இடங்கள், நாள்பட்ட மக்கள் பயன்பாடில்லா கட்டிடங்கள், நாள்பட்ட பூட்டிய குடியிருப்புகள், கோயில்கள், மசூதிகள், சர்ச், பார்க்குகள் மற்றும் இதர அரசு மற்றும் அரசு சாரா கட்டிடங்கள், கல்விக்கூடங்கள் இன்னபிற இடங்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகி டெங்கு, சிக்கன் குன்யா, மலேரியா, யானைக்கால் போன்ற பூச்சிகள் மூலம் பரவும் வியாதிகளை தடுக்கும் விதமாக DBCக்களை கொண்டு பணி மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜெ1 நாள் 17.9.2018ன் படி, மாவட்ட ஆட்சியர் விலை விகிதத்தில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுடன் 10 பேர் Rapid Response Team (RRT) டெங்கு தடுப்பு நடவடிக்கை (டெங்கு காய்ச்சல் கண்ட பகுதிகளில்) விரைவு செயலாக்க குழுவிற்கு 10 பேர் சேர்த்து 65 DBCக்களை (Outsourcing) நியமித்து கொள்ள ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்கு பணியில் ஈடுபடுத்திக் கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு அதன் பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்த காலம் 13.10.2020ம் தேதியுடன் முடிவடைவதாலும், எதிர் வரும் வடகிழக்கு பருவ மழைக்காலம் என்பதாலும், நோய் தொற்று ஏற்படாமல் பொது மக்களை பாதுகாக்க வேண்டி இப்பணியினை தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான மூன்று மாத தோராய செலவினத் தொகை ரூ.25.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத் தொகையினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.690**	**அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

செம்பாக்கம் நகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் 12 பணியாளர்கள் மற்றும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் 12 பணியாளர்கள் ஆக மொத்தம் 24 பணியாளர்களின் மாதாந்திர தினக்கூலி ஊதியத்திலிருந்து 12 சதவீதம் பணியாளர் வருங்கால வைப்பு நிதிக்கு சந்தா தொகை பிடித்தம் செய்யப்பட்டு அத்தொகையுடன் நிர்வாக பங்குத் தொகையும் சேர்த்து பணியாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திற்கு பிரதி மாதம் 10ம் தேதிக்குள் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், அதற்கான கணக்கு தாக்கல் உரிய படிவத்தில் அதற்குரிய வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். எனவே. உரிய தலைப்பில் மாதா மாதம் செலுத்தவும் கலந்தாலோசகர் மூலம் வலைதளத்தில் கணக்குகள் தாக்கல் செய்யவும், இதற்கான கலந்தாலோசகர் கட்டணம் பிரதி மாதம் வழங்கிடவும், 2020–21ம் ஆண்டிற்கான தோராய செலவினம் தொகை ரூ.36000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**	இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 691**	**அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

செம்பாக்கம் நகராட்சியில் 2020–21 ம் ஆண்டின் பொது நிதியின் கீழ் 16.9.2020ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும்,

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வேளச்சேரி பிரதான சாலையில் சாலையின் நடுவே அமைக்கப்பட்டுள்ள சென்டர் மீடியன் மின் விளக்குகளுக்கான கேபிள் ராஜகீழ்பாக்கம் சிக்னல் முதல் கௌரிவாக்கம் நகராட்சி எல்லை முடிவு வரை பழுதடைந்தள்ளதை மாற்றி புதியதாக அமைத்தல் பணி | 9.90 | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 0.15% குறைவு |
| | | | ஆர். சுஜாதா | மதிப்பீட்டை விட 1.50% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**	பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 692**	**அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

செம்பாக்கம் நகராட்சியில் **2020–21**ம் நிதியாண்டிற்கு பொது நிதியின் கீழ் தேவையான எழுது பொருட்கள் மற்றும் அச்சு பொருட்கள் சப்ளை செய்வதற்காக **17.9.2020** அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக பயன்பாட்டுக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள் அச்சடித்து வழங்குதல் மற்றும் எழுது பொருட்கள் சப்ளை செய்தல் பணி | **5.00** | Sangu Nagar Printing & Registers Mfg Indl. Co-op Society Ltd | குறைவு |
| | | | The Chennai Printing Stationery Workers Industrial Co-operative Society Ltd | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.693 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான போலிரோ வாகனம் எண். TN 11 AK 6142ல் காலமுறை பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியா கேரேஜ் நிறுவனத்திடம் வாகனத்தை ஒப்படைத்து பணி செய்து முடிக்கவும், அதற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.**26700/–**க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண். 694 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சியில் **2020–21**ம் ஆண்டு நகராட்சி நிதி / அரசு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிக்கையினை மாநில அளவில்/ மாவட்ட அளவிலான நாளிதழ்களில் செய்தி மக்கள் தொடர்பு துறை வழியாக விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பர கட்டணத்தினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தொகை வழங்க வேண்டிய நிறுவனத்தின பெயர் | தொகை |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்ட பணி தார் சாலை அமைத்தல் பணி | eyedea brand solutions 5f, 5th floor, J.P Tower, 7/2, Nungambakkam High Road, Chennai – 34. | ரூ. 68145/- |
| 2 | மூலதன மாண்ய நிதி திட்டம் எரிவாயு தகன மேடை அமைத்தல் பணி | eyedea brand solutions 5f, 5th floor, J.P Tower, 7/2, Nungambakkam High Road, Chennai – 34. | ரூ. 91823/- |
| 3 | இளம் பொறியியல் மற்றும் கலை அறிவியல் பட்டதாரிகளுக்கு செம்பாக்கம் நகராட்சியில் பயிற்சி பெற விளம்பரம் செய்தல் பணி | eyedea brand solutions 5f, 5th floor, J.P Tower, 7/2, Nungambakkam High Road, Chennai – 34. | ரூ. 13531/- |

**அலுவலக குறிப்பு:** அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விளம்பர கட்டணத் தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலுத்தியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.695 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

செம்பாக்கம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜபுரம் வணிக வளாக கடைகளில் நான்கு கடைகள் காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மூலம் நியாய விலை அங்காடி நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி கடைகளுக்கான மாத வாடகை செலுத்த கோரியதில், 1.6.2020ம் தேதிய பொது மேலாளர், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை அவர்களின் கடிதத்தில் கடை ஒன்றுக்கு ரூ.5000 வீதம் மாத வாடகை தருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பொதுப்பணித்துறையின் செந்துூர விலைப்பட்டியல் படி வாடகை மதிப்பீடு செய்யப்பட்டதில் ஒரு கடைக்கு ரூ.3000/– என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, பொது மேலாளர், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள வாடகை தொகை கூடுதலாக உள்ளதால், அத்தொகையின் அடிப்படையில் (ஒரு கடைக்கு ரூ.5000 வீதம்) மாத வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொதுப்பணித்துறையின் செந்துூர விலைப்பட்டியல் படி வாடகை மதிப்பீடு தொகையினை விட பொது மேலாளர், காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள வாடகை தொகை கூடுதலாக உள்ளதால், அத்தொகையின் அடிப்படையில் நான்கு கடைகளுக்கு மாத வாடகை வசூலிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந க எண் 811/2019/அ1 நாள் 15.9.2020**

**தீர்மான எண். 696 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

2019–2020 ம் ஆண்டின் மாநில கணக்காயர் அலுவலக தணிக்கை பத்தி எண்.B02/19-20ல் நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு வசூலிக்கப்படும் வாடகை தொகையினை குத்தகைதாரர்கள் பிரதி மாதம் 10ம் தேதிக்குள் செலுத்தப்பட வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு பின்னர் செலுத்தும் குத்தகைதாரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வாடகை தொகைக்கு 18 சதவீத அபராதமாக (Penalty)

விதித்து கூடுதலாக வசூலிக்கப்பட வேண்டும் எனவும், வலைதள மென்பொருளில் இதற்கான வழிவகையினை ஏற்படுத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.26 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.1.1994ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின் அடிப்படையில், இந்நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகளின் குத்தகை கேட்பு தொகையுடன் பிரதி மாதம் 10ம் தேதிக்கு பின்னர் செலுத்தப்படும் வாடகை தொகையுடன் 18 சதவீத அபராதம் (Penalty) சேர்த்து வசூலிப்பதற்கான வழியினை நகரமைப்புகளுக்கான மையப்படுத்தப்பட்ட இணைய வழி மென் பொருளில் (Urban Tree)ல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அரசாணையின் படி அபராத தொகை (Penalty) சேர்த்து வசூலிக்க இணைய வழி மென் பொருளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>ந க எண் 811/2019/அ1 நாள் 9.9.2020</u>

**தீர்மான எண்.697 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

செம்பாக்கம் நகராட்சியில் 4.9.2020 அன்று பெறப்பட்ட 2020–21ம் ஆண்டிற்கான பொது நிதி பணிகளின் கீழ் இரண்டு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| | பொது நிதி 2020–21 | | |
| 1 | செம்பாக்கம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட தெருக்களில் உள்ள தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல், மின் தடைகளால் ஏற்படும் பழுதுகள் சரிபார்த்தல் மற்றும் தடுத்தல் பணி | 85.66 | சிம்லா கூல் மேக்கர்ஸ் 48/526, முடிச்சூர் ரோடு, சென்னை – 600045. |
| | | | விஜய் எலக்ட்ரிகல்ஸ் நெ.83, வெங்கடாஜலம் தெரு, திருவல்லிகேணி, சென்னை – 600005. |

இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. 4.9.2020ம் தேதியில் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை திறந்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிக்கான விலை ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 9.9.2020ல் திறக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | பொது நிதி 2020–21 | | | |
| 1 | செம்பாக்கம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட தெருக்களில் உள்ள தெருவிளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல், மின் தடைகளால் ஏற்படும் பழுதுகள் சரிபார்த்தல் மற்றும் தடுத்தல் பணி | 85.66 | சிம்லா கூல் மேக்கர்ஸ் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| | | | விஜய் எலக்ட்ரிகல்ஸ் | மதிப்பீட்டை விட 1.81% அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில், குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக திருவாளர். சிம்லா கூல் மேக்கர்ஸ் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

2. பராமரிப்பு பணி என்பதால், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தாரருக்கு Letter of Acceptance வழங்கி உரிய வைப்புத் தொகை செலுத்திய பின்பு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண். 698 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

செம்பாக்கம் நகராட்சியில் 4.9.2020 அன்று பெறப்பட்ட 2019–20 மூலதன மாண்ய நிதி திட்டத்தின் கீழ் இரண்டு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் |
|---|---|---|---|
| | **மூல தன மான்ய நிதி திட்டம் (Capital Grant Fund) 2019-20** | | |
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் எரிவாயு தகன மேடை அமைத்தல் பணி | 135.00 | எஸ்.எஸ்.ஜி. இன்ஜினியரிங், நெ. 11/91, காமராஜர் தெரு, திருவள்ளுவர் நகர், அயனாவரம், சென்னை 23. |
| | | | எம்.எச்.டி. இன்ஜினியரிங், நெ. 17/12, கற்பக விநாயகர் கோவில் தெரு, ஈக்காடுதாங்கல், சென்னை 32. |

இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. 4.9.2020ம் தேதியில் வலைதளத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்க முடியாத காரணத்தினால், 7.9.2020ம் தேதியில் மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை திறந்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் முன்னிலையில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதிகள் பெற்று தேர்வு செய்யப்பட்டுள்ளன.

தொழில்நுட்ப கூர்ந்தாய்வில் தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்கண்ட பணிக்கான விலை ஒப்பந்தப்புள்ளியினை (Price Bid) ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 9.9.2020ல் திறக்கப்பட்டு கீழ்கண்ட விவரப்படி ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி விவரம் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| | மூல தன மான்ய நிதி திட்டம் (Capital Grant Fund) 2019-20 | | | |
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் எரிவாயு தகன மேடை அமைத்தல் பணி | 135.00 | எஸ்.எஸ்.ஜி. இன்ஜினியரிங், | மதிப்பீட்டை விட 0.30% அதிகம் |
| | | | எம்.எச்.டி. இன்ஜினியரிங், | மதிப்பீட்டை விட 0.52% குறைவு |

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்காக பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில், குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக திருவாளர். எம்.எச்.டி. இன்ஜினியரிங் மதிப்பீட்டை விட 0.52% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.

2. திட்ட பணி என்பதால், அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தாரருக்கு Letter of Acceptance வழங்கி உரிய வைப்புத் தொகை செலுத்திய பின்பு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண். 699 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது

பொருள் எண்.12

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2020-21-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.5, எம்.ஏ.வி. வசந்தம் அவென்யு, சங்கோதியம்மமன் கோயில் 4வது மற்றும் 5வது தெருவில் மழைநீர் வடிகால்வாயின் மீது மூடி அமைத்தல் பணி | 6.50 |
| 2 | நகராட்சி பகுதியில் 130 இடங்களில் உள்ள சிறுமின்விசை மோட்டர்கள் பராமரிப்பு செய்தல் பணி | 5.00 |
| 3 | வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் M Sand Bags விநியோகம் செய்தல் பணி | 2.00 |
| 4 | வார்டு எண்.13 வீரமாமுனிவர் தெரு, வார்டு எண்.7 கௌசிக் அவென்யு ஆகிய இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து | 7.80 |

| | | |
|---|---|---|
| | அவற்றில் நீர்மூழ்கி மின் மோட்டார்கள் சப்ளை செய்து பொருத்துதல் பணி மற்றும் வார்டு எண்.7 ராஜ ராஜேஸ்வரி நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் தொட்டியிலிருந்து நீரை வெயேற்ற 5 எச்பி நீர்மூழ்கி மின் மோட்டார் சப்ளை செய்து பொருத்துதல் பணி | |
| 5 | வார்டு எண்.5 சங்கோதியம்மன் கோயில் தெரு, துர்கா காலனி முதல் தெரு ஆகிய இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து அவற்றில் நீர்மூழ்கி மின் மோட்டார்கள் சப்ளை செய்து பொருத்துதல் பணி | 6.50 |
| 6 | வார்டு எண்.12 வள்ளல் யூசப் நகர் 3வதுதெரு, வார்டு எண்.13 இம்மானுவேல் தெரு, வார்டு எண்.15 காமராஜபுரம் பிரதான சாலை, ஜெகஜீவன்ராம் தெரு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டள்ள மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாயில் Manhole அமைத்தல் பணி | 4.00 |
| 7 | ஆலவட்டம்மன் கோயில் தெரு எம்.ஜி.ஆர். பூங்காவில் பழுதடைந்த மின் கேபிள்கள் மாற்றி அமைத்தல் மற்றும் பராமரிப்பு செய்தல் பணி | 9.80 |
| 8 | செம்பாக்கம் நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்காக அமைக்கப்பட்டுள்ள குளோரினேஷன் அமைப்புகளுக்கு தேவையான லிக்யூட் ஹைப்போ குளோரின் சப்ளை செய்தல் பணி | 3.00 |
| 9 | சிட்லபாக்கம் பிரதான சாலையில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் பழுது பார்த்தல் பணி | 4.00 |

அலுவலக குறிப்பு :–

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.700 அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

பொருள் எண்.13

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.6.2020 முதல் 30.6.2020 வரையான காலத்திற்கு இரு எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், | 672000 |

| | | |
|---|---|---|
| | இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | |
| 2 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 1.7.2020 முதல் 31.7.2020 வரையான காலத்திற்கு இரு எண்ணிக்கையிலான டாடா ஏஸி வாகனத்தில் 2000லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி, உயர் அழுத்த மோட்டாருடன் கூடிய ஸ்பேரயர், வண்டி வாடகை, டீசல், இரண்டு நபர்களுக்கான நாள் ஊதியம், ஓட்டுநர் ஊதியம், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ் க்கு வழங்கியது | 694400 |
| 3 | செம்பாக்கம் நகராட்சி பகுதியில் வார்டு வாரியாக 19.6.2020 முதல் 31.7.2020 வரையான காலத்திற்கு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆட்டோ மைக் செட் மூலம் விளம்பரம் செய்தது வண்டி வாடகை, எரிபொருள், படிகள் மற்றும் இதர செலவுகள் உட்பட வாடகை தொகை ஒப்பந்ததாரர் திருமதி. ஆர். சத்யா க்கு வழங்கியது | 77400 |
| 4 | கொரோனா தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் நோய் தொற்று எற்பட்ட பகுதிகளில் / கட்டிடங்களில் அவர்களை தனிமைபடுத்தி வைப்பதற்காக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தடுப்பு வேலி அமைத்ததல் பணி மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர் மெஸ்ஸர்ஸ் அருணாச்சலம் இன்பிராஸ்ரக்ஷர் டெவலப்மண்ட நிறுவனத்திற்கு வழங்கியது. | 149838 |
| 5 | கொரேனா தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள சிறிய பெட் பாட்டில்கள், கையுறை, மஞ்சள் பை, லைசால், சானிடைசர், டிரம் பிளாஸ்க், 3 லேயர் முகக்கவசம் ஆகிய பொருட்கள் சப்ளை செய்தமைக்கு ஒப்பந்ததாரர் திரு. கே. ராமதாஸ்க்கு வழங்கியது | 1335052 |

**தீர்மான எண். 701** **செலவினங்கள் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

பொருள் எண்.14

இந்நகராட்சிக்கு சொந்தமான கௌரிவாக்கத்தில் உள்ள வணிகவளாக கடை எண் 12,13,14,18,19 மற்றும் 20 எண் கொண்ட 6 கடைகள் 2020 –2021 ம் ஆண்டு முதல் காலியாக உள்ளது மேற்கண்ட கடைகளை நகராட்சி மூலம் கையகப்படுத்தப்பட்டுள்ளன கோவின் 19 தொடர்பாக பணி நடைபெற்றதாலும் தமிழ் நாட்டில் தொடர்ந்து 144 தடை உத்தரவு இருந்ததாலும் மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோராமல் நிலுவையில் வைக்கப்பட்டது. தற்பொழுது சகஜ நிலை உருவானதால் இந்நகராட்சியின் நிதிநிலையினை உயர்த்தும் பொருட்டு கௌரிவாக்கத்தில் காலியாக உள்ள 6 எண்ணம் கொண்ட கடைகளை மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியின் மூலம் நடவடிக்கை எடுக்க ஏதுவாகவும் ஒப்பந்தப்புள்ளி

அறிவிக்கையினை தினசரி நாளிதழில் வெளியிட்டு உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் இதற்கு ஏற்படும் விளம்பர செலவினம் தோராய தொகை ரூ.75,000யை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. கொளரிவாக்கத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடை எண் 12,13,14,18,19, மற்றும் 20 யை நிபந்தனைகளுக்குட்பட்டு மறு ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளியின் மூலம் நடவடிக்கை தொடரலாம்.
2. விளம்பர செலவினம் ரூ 75000 யை பொது நிதியின் கீழ் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.702** அலுவலக குறிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி